JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-1  Witness
for Prosecution

| CC.No. | 454/2025 | Crime No. | 454/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-1- ரகு** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 07.03.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.04.2025 தேதியன்று நிலையை உதவி ஆய்வாளர் கார்த்தி என்பவர் என்னையும் நிலைய தலைமை காவலர் ராமமூர்த்தி என்பவரையும் அழைத்துக் கொண்டு நிலைய கசரகத்தில் அனுமதியின்றி மது விற்பனை மற்றும் சூதாட்ட தடுப்பு பணியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி மதியம் சுமார் 15.00 மணிக்கு முளியனூர் டாஸ்மாக் கடை அருகில் உள்ள மறைவில் கண்காணித்தபோது அங்கு நின்றிருந்த ஆஜர் எதிரி எங்களை கண்டவுடன் தப்பிச்செல்லம் முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது தனது பெயர் முருகேசன் என்றும் தனது முகவரியையும் கூறியவர் தான் தமிழக அரசு மதுபானங்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வாங்கி வைத்துள்ளதாகவும் அதனால் தான் போலீசார் ஆகிய எங்களை கண்டதும் அங்கிருந்து ஓட முயன்றதாகவும் தெரிவித்து தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி அன்றைய தினம் மதியம் 15.00 மணியளவில் முறைப்படி கைது செய்தும், அவர் தானாக முன்வந்து எடுத்து ஆஜர் செய்த 180 மில்லி லிட்டர் அளவுள்ள பிராந்தியுடன் இருந்த Black Pearl bottles -27 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். பொதுமக்கள் யாரும் சாட்சியமளிக்க முன்வராததால் நானும். என்னுடன் வந்த தலைமை காவலரும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையப்பம் செய்தோம் தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு**

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:06:45 +0530

**செய்யப்படுகிறது.** நீதிமன்றத்தில் உள்ள 27 பிராந்தி பாட்டில்களை தான் அன்றைய தினம் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். **27 பிராந்தி பாட்டில்களும் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண். 90/2025, சட்டப்பிரிவுகள் 4(1)(C) of TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றைய தினம் நானும், எனது உயர் அதிகாரியும் ரோந்து பணிக்காக எங்கு எங்கு சென்றோம் என்றால், அம்மாபேட்டை, பூதப்பாடி, குறிச்சி, குறிச்சி பிரிவு ஆகிய இடங்களுக்கு சென்றோம். நாங்கள் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டு சம்பவயிடத்திற்கு சென்றோம் என்றால், மாலை 03.00 மணிக்கு சென்றோம். சம்பவயிடத்திற்கு நாங்கள் எத்தனை மணிக்கு சென்றோம் என்றால், 15.15 மணிக்கு சென்றோம்.

நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்க்கும்போது எதிரி எதனை வைத்துக்கொண்டு நின்றிருந்தார் என்றால், மது பாட்டில்களை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். மேற்படி மது பாட்டில்களை எதில் வைத்திருந்தார் என்றால், பிளாஸ்டிக் கவரில் வைத்திருந்தார். நான் சொல்வது தவறு என்றாலும், மது பாட்டில்கள் 27 பிளாஸ்டிக் கவரில் வைக்க முடியாது என்றாலும், சரியல்ல. அவர் கீழே வைத்திருந்தார். நான் பார்க்கும்போது மது பாட்டில்கள் எதுவும் அவரது கையில் இல்லை என்றால், சரிதான். அவருக்கு அருகில் வைத்திருந்தார். நாங்கள் கண்காணிக்கும்போது மது பாட்டில்கள் எதுவும் எதிரி விற்கவில்லை என்றால், சரியல்ல. அங்கு பொதுமக்கள் நிறைய நபர்கள் இருந்தார்கள். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரி அங்கு யாருக்கும் மதுபாட்டில் விற்கவில்லை என்றால், பொதுமக்கள் இல்லை என்றால், சரியல்ல. எங்களை பார்த்ததும் அனைவரும் ஓடி விட்டனர்.
கைப்பற்றுதல் மகஜரில் வரிசை எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. மது பாட்டில்களின் மதிப்பும் கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. வழக்கு சொத்தை கைப்பற்றும்போது உயர் அதிகாரி என்னென்ன நடைமுறைகளை பின்பற்றினார் என்றால், முதலில் கைப்பற்றினார், இரண்டாவது அதில் கையொப்பம் செய்தார். கைப்பற்றும்போது அரக்கு சீல் எதுவும் வைக்கவில்லை என்றால், சரிதான். கைப்பற்றும்போது வீடியோ பதிவு எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான்.

சம்பவயிடத்தில் பொது மக்கள் சாட்சிகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை நாங்கள் விசாரிக்கவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு நான் பொய் சாட்சியும் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:06:52 +0530

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:06:59 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani